**மஹரகம நகர சபை - 2023**

---------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மஹரகம நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மஹரகம நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை. | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நியமத்தின் பந்தி இலக்கம் 3.26 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் ரூபா 196,623,414 ஆக இருக்க வேண்டிய போதிலும் ரூபா 212,384,111 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | உரிய காசு வெளிப்பாய்ச்சல் மற்றும் உட்பாய்ச்சல் சீராக்கத்தின் மூலம் ரூபா 212,384,111 ஆக காசு மீதி பெறப்பட்டுள்ளது. | காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நியமத்தின் பந்தி இலக்கம் 3.29 இன் பிரகாரம் மீளாய்வாண்டில் முதலீட்டுக்காக ஈடுபடுத்தப்பட்ட பணம் ரூபா 150,000,000 ஆக இருக்க வேண்டிய போதிலும் ரூபா 106,788,871 ஆக சீராக்கப்பட்டதன் காரணமாக ரூபா 43,211,129 இனால் முதலீட்டு செயற்பாடுகளில் இருந்தான காசு பாய்ச்சல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ரூபா 106,788,871 பெறுமதி சரியானதாகும். | - மேற்படி - |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது வேலை பூர்த்தி செய்யப்பட்ட 03 செயற்திட்டங்களின் வேலை பெறுமதி ரூபா 6,006,569 ஆக இருக்க வேண்டிய போதிலும் மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 11,700,000 கணக்கீடு செய்யப்பட்டமையால் கடன் கொடுத்தோர் கணக்கு மற்றும் செலவினக் கணக்குகள் ரூபா 5,693,431 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த மூன்று வேலைகளுக்காகவும் பகுதிக் கொடுப்பனவு மாத்திரம் மேற்கொள்ளப்பட்டமையால் மேலதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 5,693,431 கடன் கொடுத்தோர் ஆக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | செலுத்தி பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்களுக்காக கடன் கொடுத்தோர் ஒதுக்கீடுகள் மேற்கொள்ள முடியாது. |
| (ஆ) | இரண்டு செயற்திட்டங்கள் பூர்த்தியடையாதவைகள் கணக்கீடு செய்யும் போது இருதடவை குறிப்பிடப்பட்டமையினால் பூர்த்தி செய்யப்படாத கணக்கு மற்றும் ஒதுக்கீட்டுக் கணக்குகள் ரூபா 9,900,000 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் உறுப்பினர் படியாக மீளளிப்பு வருமானம் ரூபா 720,000 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | - மேற்படி - |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 02 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் அவற்றுக்குரிய உபயோக பதிவேடுகள் / அறிக்கைகளில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 17,201,027 வேறுபாடு காணப்பட்டது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேறுபாடுகளை இனங்கண்டு சரிசெய்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ஊழியர் பிணை வைப்புக் கணக்கின் பிரகாரம் மீதி ரூபா 769,379 ஆக இருந்ததுடன் ஊழியர் பிணை முதலீட்டுக் கணக்கின் பிரகாரம் ரூபா 880,592 ஆனமையால் ரூபா 111,213 வேறுபாடு காணப்பட்டது. | பிணை வைப்புத் தொகை செய்யப்பட்டவுடன் முதலீடு செய்யப்படாமை மற்றும் ஊழியர் பிணை முதலீட்டுக் கணக்கிற்கு வைப்பாளர்களின் வட்டி வருமானம் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் ஊழியர் பிணை வைப்பு கணக்கில் வட்டி உள்ளடக்கப்படாமை போன்ற காரணத்தின் அடிப்படையில் ஊழியர் பிணை வைப்புக் கணக்கிற்கும் ஊழியர் பிணை முதலீட்டுக் கணக்கிலும் காணப்படுகின்ற மீதி சமமாக இல்லை. | - மேற்படி - |
| (இ) | பேரேட்டின் பிரகாரம் ஆதனவரி ஆரம்ப மீதி ரூபா 222,220,947 ஆக இருந்ததுடன் பட்டோலைகளின் பிரகாரம் ரூபா 222,077,068 ஆனமையால் ரூபா 143,879 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | 2024 ஆம் ஆண்டில் இதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேறுபாடுகளை இனங்கண்டு சரிசெய்தல் வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை.

| | விடயம் | தொகை ரூபா. | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | முற்கொடுப்பனவு மற்றும் முற்பணம் | 1,343,706 | பட்டோலை | பட்டோலைகள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | வீட்டு வாடகை வைப்பு | 1,084,544 | - மேற்படி - | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மாகாண சபையிலிருந்து கிடைக்க வேண்டிய மூலதன நிதியுதவி | 11,471,982 | - மேற்படி - | - மேற்படி - | - மேற்படி - |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 571 | கூட்டுப்பெறுமதி ரூபா 37,439,657 ஆன காலாவதியான 208 வைப்புக்கள் ஓய்வு பெறச் செய்யப்பட்டிருக்க வில்லை. | இந்த காலாவதியான வைப்புக்கள் 2024 இன் இறுதிக் கணக்கு தயாரிக்கும் போது நாட்குறிப்புக்களின் மூலம் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 480,318,446 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 81,921,825 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ |
| (i) | ஆதன வரியும் வரியும் | 252,433 | 265,592 | 166,139 | 99,453 | 244,688 | 250,620 | 238,377 | 222,220 |
| (ii) | வாடகை | 25,260 | 27,461 | 21,913 | 5,549 | 24,545 | 24,879 | 25,168 | 11,928 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,600 | 6,830 | 6,830 | - | 600 | 473 | 473 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 6,000 | 7,141 | 7,141 | - | 9200 | 8,735 | 8,755 | - |
| | மொத்தம் | 285,293 | 307,024 | 202,023 | 105,002 | 279,033 | 284,707 | 272,773 | 234,148 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) ஆதனவரியும் வரியும்** | | |
| (i) கடந்த ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 222,214,780 ஆன நிலுவை ஆதனவரி கடன்பட்டோர் மீதியில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனவரி தொடர்பான செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் ரூபா 74,598,922 மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 147,478,148 அதாவது 66 சதவீதத்தை அறவிடுவதற்கு தவறியிருந்தது. | நிலுவையை அறவிடுவதற்காக ஆதனங்களை தடை செய்யும் உத்தியோகத்தர்களை களக் கடமையில் ஈடுபடுத்துதல் மற்றும் நடமாடும் சேவைகளை நடாத்தி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) நிலுவை ஆதனவரி காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 05 வருடங்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 97,391,793 நிலுவை காணப்பட்டது. | நிலுவையை அறவிடுவதற்காக ஆதனங்களை தடை செய்யும் உத்தியோகத்தர்களை களக் கடமையில் ஈடுபடுத்துதல் மற்றும் நடமாடும் சேவைகளை நடாத்தி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையில் ரூபா 100,000 இற்கு | அதன் செயல்முன்னேற்றம் வருமான | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | மேற்பட்ட 77 ஆதனங்களிலிருந்து ரூபா 19,996,004 தொகையும், ரூபா 50,000 இற்கும் ரூபா 100,000 இற்கும் இடையிலான 133 ஆதனங்களிலிருந்து ரூபா 9,009,215 தொகையும், ரூபா 50,000 தொகைக்கு குறைவான 55495 ஆதனங்களிலிருந்து ரூபா 207,764,789 தொகையும் நிலுவையாகக் காணப்பட்டது. | பரிசோதனையிலிருந்து பெறப்பட்ட பின் சமர்ப்பிக்கப்படும். | |
| **(ஆ)** | **வாடகை** | | |
| (i) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு 318 கடைகளிலிருந்து ரூபா 15,684,183 நிலுவை காணப்பட்டது. அந்த மீதியில் 02 வருடங்கள் முதல் 03 வருடங்களுக்கு இடையில் நிலுவையாகக் காணப்படுகின்ற 37 கடைகளிலிருந்து ரூபா 2,759,013 தொகையும், 03 வருடங்கள் முதல் 05 வருடங்களுக்கு இடையில் நிலுவையாகக் காணப்படுகின்ற 51 கடைகளிலிருந்து ரூபா 7,232,760 தொகையும், 05 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவையாகக் காணப்படுகின்ற 06 கடைகளிலிருந்து ரூபா 971,734 தொகையும் காணப்பட்டது. கடை வாடகை செலுத்தாத விற்பனை நிலையங்களின் உரித்து உடன்படிக்கையின் பிரகாரம் மீண்டும் நகர சபைக்குப் பெறப்பட்டு ஏனைய தரப்பினருக்கு வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக நீண்டகாலமாக நிலுவை முன்கொண்டுவரப்படுவதற்கு காரணமாக இருந்தது. | பொதுச்சந்தை, தெஹிவளை வீதி வாராந்த சந்தை நுழைவு வீதி மற்றும் கொட்டாவ ஏனைய வியாபார நிலையங்களுக்குரிய நிலுவைகளுக்காக இறுதி அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது. அவ்வாறு தற்போது வரையில் நீண்டகாலமாக நிலுவையாகக் காணப்படுகின்ற 69 கடைகளுக்கு சட்டரீதியான நடவடிக்கைகளுக்காக அனுப்பட்டுள்ளதுடன் அவைகளில் அநேகமானவை தற்போது விசாரணையில் காணப்படுகின்றது. | நிலுவை வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு உடன்படிக்கைக் காலம் முடிவடைந்திருந்த 210 வியாபார நிலையங்களுடன் உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கோ அல்லது அந்த வியாபார நிலையங்களை சபைக்குப் பெற்று ஏனைய தரப்பினருக்கு வாடகைக்கு வழங்குவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கையேற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கோ அல்லது ஏனைய தரப்பினருக்கு வாடகைக்கு வழங்குவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | கொழும்பு வீதி ஆதனவரி இலக்கம் 98 என்ற வாகன தரிப்பிடத்தை வாடகைக்கு வழங்காமையின் அடிப்படையில் சபைக்கு கையேற்கப்பட்டிருந்த போதிலும் வாடகையாளரிடமிருந்து அறவிட வேண்டிய 2023 யூன் மாத வாடகை மற்றும் தண்டப்பணமான ரூபா 237,050 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் சமயலறைக் கழிவுகள் விற்பனை செய்வதற்காக அல்லது கூட்டுப்பசளை செயற்திட்டம் ஒன்றின் மூலம் பசளை உற்பத்தி செய்வதற்கு மற்றும் உக்காத பசளைகளை விற்பனை செய்வதற்காக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாமையினால் மீளாய்வாண்டில் கழிவுப்பொருள் அகற்றுவதற்காக கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபைக்கு ரூபா 69,717,610 தொகையும், கெரவலப்பிட்டி அனல் கூடத்திற்கு கழிவுப் பொருட்களை கொண்டு செல்வதற்காக சபையில் காணப்படுகின்ற வாகனங்களுக்கு மேலதிகமாக தனியார் வாகனங்களுக்காக ரூபா 43,667,950 தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 113,385,560 செலவிடப்பட்டிருந்தது. | மகரகம அதிகாரப் பிரதேசத்தில் உருவாகின்ற கழிவுகளின் அளவு அதிகமாக இருந்ததுடன் அகற்றப்பட்ட கழிவுகள் கரதியான கழிவுப்பொருள் தளத்திற்குக் கொண்டு செல்வதற்கும் மற்றும் வாடகை அடிப்படையில் கழிவுப் பொருள் கொண்டு செல்வதற்காக பெறப்பட்ட வாகனங்களுக்காக பணத்தை செலவிட வேண்டி ஏற்பட்டிருந்தது. மகரகம நகர சபைக்குச் சொந்தமான கூட்டுப்பசளை செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கோ அல்லது கால்நடை உணவு வகையில் ஒன்று சேர்த்து விற்பனை செய்வதற்காக நிலையம் ஒன்று காணப்படாமையின் காரணமாக கழிவுகள் வீட்டு ரீதியிலும் வியாபார நிலையங்களிலிருந்தும் தனித்தனியாக வேறுபடுத்தி சேர்க்கப்பட்டு கரதியான மிஹிசரு கூட்டுப்பசளை தளத்திற்கு வழங்கப்படுகின்றது. | கழிவுப் பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் சபைக்கு வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் கழிவுப்பொருட்களை கொண்டு செல்வதற்காக இயலுமானவரை சபையின் வாகனங்களை ஈடுபடுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் வியாபார நிறுவனங்களின் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக ரூபா 11,698,788 வருமானம் பெறப்பட்டிருந்த போதிலும் சபையினால் கழிவுப் பொருள் வரி அறவிடுவதற்காக உபவிதியொன்று விதிக்கப்படாதிருந்ததுடன் சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. | நகர சபை பதவிகள் மற்றும் உள்ளூர் மாகாண சபைகளை தொடர்ச்சியான நிலைமைக்கு கொண்டு வந்ததன் பின்னர் நிறுவனங்களின் கழிவுப் பொருட்களை அகற்றியதன் மூலம் வரமானங்களைச் சேகரிப்பதற்காக உபவிதியொன்றை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கழிவுப்பொருள் வரியை அறவிடுவதற்கு உபவிதியொன்று விதிக்கப்படல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆகஸ்ட் மாதத்தின் போது மூடப்பட்டிருந்த நடைமுறைக் கணக்கில் ரூபா 2,052,258 பெயரளவு பெறுமதி உடைய காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அது மீளாய்வாண்டின் போது தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக பரிசோதனை ஒன்றை மேற்கொள்வதற்காக உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் புலனாய்வு உத்தியோகத்தர்கள் மூன்று பேரையுடைய சபையொன்று நியமிக்கப்பட்டதுடன் அந்த பரிசோதனை அறிக்கை கிடைத்த பின்னர் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிதி மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சின் 2018 திசெம்பர் 31 ஆம் திகதிய இலக்கம் 4/2018 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிறுவனத்திற்குச் சொந்தமான சகல நிலையான சொத்துக்களும் மீள் மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் நகர சபையினால் | அது 2020 ஆம் ஆண்டின் போது புதிய கணக்கு முறைமையை அமுல்படுத்துவதுடன் மேற்கொள்ள வேண்டி இருந்தமையால் தற்போது மீள்மதிப்பீடுகள் மேற்கொண்டு உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்படவில்லை. | மீள்மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் போதும் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியின் போது காசேட்டில் ரூபா 194,580,046 நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் அத்திகதியில் அன்றன்றைக்கான தேவைக்காக பணம் வைக்கப்பட்டு மிகுதிப் பணம் குறுங்கால வைப்புக்களில் முதலீடு செய்யப்படாமையினால் சபைக்கு பெற முடியுமாக இருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | காசேட்டில் காணப்பட்ட மீதியின் பிரகாரம் தற்போது ரூபா 200 மில்லியன் தொகை நிலையான வைப்பிற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. | மேலதிகமாகவுள்ள பணத்தை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்தல் வேண்டும். |
| (ஈ) | அரசாங்கத்திலிருந்து மேற்கொள்ளப்படுகின்ற ஆதன கடன் வட்டி தவணைப் பணம் சபைக்கு மீண்டும் மீளளிப்புச் செய்யப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் போது அந்தக் கணக்கின் மீதி ரூபா 5,445,782 வரை அதிகரித்திருந்ததுடன் அந்தத் தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி ஆணையாளரின் 2019.09.19 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான ஆதனக் கடன் மீளளிப்பு செய்யப்படுகின்றமை காண்பிக்கப்பட்டதுடன் அதன் பின்னரான ஆண்டுகளுக்காக இது தொடர்பாக எழுத்து மூலம் அறிவிக்கப்பட வில்லை. | ஆதனக்கடன் வட்டி மீளளிப்புச் செய்யப்படல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதி வரையில் 01 வருடம் முதல் 07 வருடங்கள் வரையிலான காலவீச்சில் இருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 187,327,499 பெறுமதியான வேலைக் கடன் கொடுத்தோரைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2016, 2017, 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் தெளிவாக இனங்காணப்பட்ட கடன் கொடுத்தோரை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் பிரச்சனைகளுடன் உள்ள கடன் கொடுத்தோர் மீதியை எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேலைக் கடன் கொடுத்தோர் மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஊ) 2019, 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 25,424,406 பெறுமதியான பொது வழங்கல் கடன் கொடுத்தோர் மீளாய்வாண்டின் போது தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் போது இந்த மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வழங்கல் கடன் கொடுத்தோர் மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) நீண்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற நீதிமன்ற வைப்பு, பிணை வைப்பு மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி கணக்குகளின் கூட்டுநிதியான ரூபா 5,193,559 தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 87 காணிகளுக்கிடையே 38 காணிகள் அளவில் பெறுமதி இனங்கண்டு 2023 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உரித்துறுதி தொடர்பான விபரங்களுடன் ஆதனத்தில் 78 காணிகள் தொடர்பான விபரங்கள் மாத்திரம் காணப்படுவதுடன் தற்போது பெறுமதிகளை இனங்காணும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

**3.4 வாகன முறைமை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையில் சபைக்குச் சொந்தமான 26 வாகனங்கள் செயலிழந்த நிலையில் காணப்பட்டது. கொம்பெக்டர் வண்டி 2020 ஆம் ஆண்டு முதல் செயலிழந்து காணப்பட்டதுடன் ஏனைய வாகனங்கள் எப்போதிலிருந்து | பதில் பின்னர் சமர்ப்பிக்கப்படும். | வாகனங்களைப் பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயலிழந்து காணப்பட்டது என்பது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட டயர்களில் உற்பத்தி ஆண்டு 02 வருடங்கள் முதல் 06 வருடங்களுக்கிடையிலான காலம் பழமையான ரூபா 2,077,943 பெறுமதியான 34 டயர்கள் மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் களஞ்சியத்தில் காணப்பட்டது. மேலும் 2022 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 2008 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட ரூபா 213,150 பெறுமதியான 07 டயர்களும் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் எஞ்சியிருந்தது. | தற்போது உற்பத்தி ஆண்டைக் கவனத்தில் கொண்டு கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்படுவதுடன் 2023 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட 41 டயர்களில் தற்போது 14 டயர்கள் விநியோகிக்கப்பட்டுள்ளது. சில வாகனங்களை பழுது பார்க்கும் நிலைமையின் அடிப்படையில் கராஜ் இல் காணப்பட்டதன் காரணமாகவும் மற்றும் டயர் கோரப்பட்டிருந்த போதும் இது வரை தேவை ஏற்படாதிருந்ததன் அடிப்படையில் டயர்கள் களஞ்சியத்தில் இருந்து கோரப்படவில்லை. | தேவையின் அடிப்படையில் மற்றும் உற்பத்தி ஆண்டை இனங்கண்டு டயர்களைக் கொள்வனவு செய்து கொள்ளப்படல் வேண்டும். |

## 3.5 ஒப்பந்த நிருவாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மகரகம் இலக்கம் 35 என்ற காணியின் பொது மலசலகூட நிர்மாணம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | 2020 யூலை 11 ஆம் திகதிய இலக்கம் 03/2020 என்ற உள்ளூராட்சி மற்றும் சுற்றாடல் அமைச்சு செயலாளரின் (மேல் மாகாணம்) சுற்றறிக்கை இலக்கம் 03 இன் பிரகாரம் 02 மில்லியனுக்கு மேற்பட்ட நிர்மாண செயற்திட்டத்திற்காக செயற்திட்ட அறிக்கை ஒன்று சமர்ப்பிக்க வேண்டியிருந்ததுடன் அதற்கு நியாயமான ரீதியில் அறிக்கை மற்றும் செயற்திட்டம் தொடர்பான சாத்தியவள அறிக்கையும் உள்ளடக்கி இருக்க வேண்டியிருந்த போதிலும் | ஏற்றுக்கொள்கின்றோம். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ii) | 2022 ஏப்ரல் 22 ஆம் திகதிய நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளரின் கடிதத்தில் மேற்கூறப்பட்ட காணியில் உத்தேசிக்கப்பட்ட பொது மலசல கூடத்தை அபிவிருத்தி செய்வதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் பரிந்துரை வழங்கப்படாதிருந்த போது மற்றும் அங்கீகாரம் இன்றி மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்களை நிறுத்துமாறு அறிவிக்கப்பட்டிருக்கும் போது 2022 சனவரி மாதத்தின் போது ஒப்பந்தம் கையளித்து அதன் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | இதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் தனிப்பட்ட ரீதியில் கலந்துரையாடல் மேற்கொண்டு அவர்களின் வாய்மூல ஆலோசனைகள் பெற்று தலைவரின் முழுமையான அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்த செயற்திட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் கட்டம் கட்டமாக வேலைகளை பூர்த்தி செய்து மக்களுக்கு கையளிக்கப்படும். | உரிய பரிந்துரை மற்றும் அங்கீகாரத்தைப் பெற்று நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பித்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 செப்தெம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 2.3(iv) பந்தியின் பிரகாரம் ஒப்பந்தப் பணிகள் உப ஒப்பந்தம் வழங்கப்படாதிருப்பதற்கு உரியதாக சங்கத்தினால் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளதுடன் உப ஒப்பந்தங்களில் ஈடுபடுத்துவதாயின் அவ்வாறான சங்கங்கள் / அமைப்புக்களை கறுப்புப் பட்டியலில் இடல் வேண்டும். எனினும் தலவத்துகொட மணல் வீதியில் காணப்பட்ட வடிகாணை விருத்தி செய்தல் மற்றும் சாந்திபுரம் 03 ஆவது ஒழுங்கையில் இருபக்கமும் வடிகாணை மறுசீரமைக்கும் இரண்டு செயற்திட்டங்கள் சமூக அடிப்படையிலான சபைகளுக்கு கையளிக்கப்பட்டிருக்கும் போது உப ஒப்பந்தமாக வேறொரு நபருக்கு கையளிக்கப்பட்டிருந்தமை பொது மக்களால் அவதானிக்கப்பட்ட போதிலும் சபை அது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்க வில்லை. | கையளிக்கப்பட்ட வேலைகளை நிறைவேற்றுவதற்காக வேறு நபர்களுக்கு ஒப்பந்தம் வழங்குகின்றமை உறுதிப்படுத்தப்படுமாயின் அவ்வாறான சங்கங்களை கறுப்புப்பட்டியலில் இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உப ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளதா என கண்டறிந்த அதன் பிரகாரம் அந்த சங்கங்களை கறுப்புப் பட்டியலில் இடல் வேண்டும். |